இருப்பது வேறு விஷயம். ஆகவே, இதைப்பற்றி பத்து நாட்களுக்குப் பிறகு மீண்டும் கூடி முடிவு செய்யலாம். சில சந்தேகங்களைக் கிளப்பியிருக்கிறோம். எனவே, போடக்கூடிய ரூல்கள் பர்பெக்டாக இருக்கட்டுமே என்று சொன்னேனே தவிர, இதில் டிஃபீட், விக்டரி என்று ஒன்றுமில்லை. நீங்கள் ஜனநாயக முறையிலே எதிர்க்கட்சிகளின் கருத்தை ஏற்று குழுவிற்கு அனுப்பியமாதிரியும் இருக்கும். எனவே, யோசனை சொன்னவர்கள் எல்லோரையும் போட்டு நல்ல முடிவாக, சரியான முடிவாக வந்தால் நல்லதாக இருக்கும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்தக் கமிட்டியிலே டாக்டர் ஹாண்டே அவர்கள்கூட இருக்கிறார்கள். அவர்கள் ஒரு கூட்டத்திற்குக்கூட வரவில்லை என்று கருதுகின்றேன். அவர்கள் அதிலே கலந்துகொண்டு இந்த யோசனைகளை அதில் சொல்லியிருக்கலாம். இப்பொழுது மாண்புமிகு அமைச்சரவர்கள் எடுத்துக்காட்டியதைப்போல், எல்லோரும் சேர்ந்து நிறைவேற்றி விட்டு, அமைச்சரவர்கள் எடுத்துக் காட்டியதைப்போல் திருத்தங்கள் கொடுத்தால் அவைகளைப்பற்றி மறுபரிசிலனை செய்யலாம், பரிசீலித்து இணைத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :—

"10—8—1973-ம் நாளன்று அவைமுன் வைக்கப்பட்ட தமிழ்நாடு சட்டப் பேரவை நடைமுறை விதிக் குழுவின் பரிந்துரைகளின் மீதான இறுதி அறிக்கைக்கு இப்பேரவை ஒப்புதல் அளிக்கிறது".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(ஆ) ஓய்வு பெற்ற பேரவைச் செயலாளர் திரு. கா. து. நடராசன் அவர்களுக்குப் பாராட்டு.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன் :

"தமிழ்நாடு சட்டப் பேரவையின் செயலாளராகப் பணியாற்றி 14—5—1973-ம் நாள் முற்பகலில் ஓய்வுபெற்ற திரு. கா. து. நடராசன், எம்.ஏ., பி.எல். அவர்கள் நமது சட்டமன்றத்தில 1956-ம் ஆண்டு முதல் 1973-ம் ஆண்டு வரையில் ஆற்றியுள்ள நீண்டகால தகைசால் பணியையும், உடனடியாக ஆலோசனையளிப்பதில் அவருக்கிருந்த திறமை, சட்டமன்ற விதிகள், மரபு ஆகியவற்றில் அவர் கொண்டிருந்த அறிவாற்றல்,